உ

சிவமயம்.

ஆண்டவர் துணை.

மாகாளியம்மன் துணை.

செட்டிமாநகரம் மாட்சிமைதங்கிய

மாகாளியம்மன்

பக்திரச அலங்காரம்

இஃது

செட்டிபாளையம்

சுப்பராய ஆசாரி மகன்

ஜி. எஸ். நஞ்சப்ப ஆசாரியாரால்

இயற்றப்பட்டு

ஷை யூர்

ராமசாமி முதலியார் மகன்

உபாத்தியாயர் முத்துசாமி முதலியாரால்

பார்வையிடப்பட்டு

திருப்பூர்

ஸ்ரீ கருணாம்பிகை அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1927

[அணா 0-1-0

OFFICE OF THE REGISTRAR
38
2-APR 1927
MAD

3ஒ

E25:38:21CM
N27
18113

உ

சிவமயம்.

செட்டிபாளையம் மாகாளியம்மன்

பக்திரச அலங்காரம்.

விநாயகர் துதி விருத்தம்.

சீர்மேவும் செட்டிநகர் தனில் வளரும்
கார்மேகன் தங்கைமேல் மாலைபாட
பேர்பெருகும் பெரிச்சாளி வாகனனே
பிரியமுடன் அநுதினமும் பேணுவோமே

சரஸ்வதி துதி (பாட்டு)

(காந்தியே காந்தியே கறஞ்சந்திர என்றமெட்டு.)

(பல்லவி.)

வாணியே வாணியே வாக்கருள்வாய் கலை
வாணியே வாணியே (வா)

(அநுபல்லவி.)

வருசையாக ரசம் பாடும் புருஷர்க்கெல்லாம் அரசியே நீ (வா)

(சரணம்.)

தேவர்கள் புகழும் பார்ப்மதேவருக்குப் பாரியே
தேடியே பதம் பணிந்தேன் அவ்வையன் குமாரியே
தெரிசனந்தாராய் நஞ்சேயனைக்காராய்
என்னோராகவே வாராய் மொழிகூராய் வெகுசோருய் (கலைவா)

செட்டிமாநகர் சிறப்பு.

(காந்தி சன்யாசி என்றமெட்டு) ௨

செப்புரேன்பாரு செட்டிமாநகர் ஜோரு நான்
பத்தினியின் பொங்கலென்று பரவுதையா பறையோசை
அதைப்பார்த்து வருவோமென்று பாரிலோர்க்கு அதிகாசை (செ)
சோமநல்ல வாரத்திலே சுந்திரகணேசருக்கு நேமமுடன்
பொங்கலிட நாம போகவேணுமடா (செ)
செவ்வாய்க்கிழமை சேதி செப்பத்தகாத சோதி
கவ்வாளாங்கள் தங்கை காகம் வரும் பிரக்யாதி (செ)
மட்டடங்கா வாத்தியங்கள் கொட்டி முழக்கிவர
பட்டம்பகல் போலவாணம் செட்டு செட்டாய்தான் அதிர (செ)
மாகாளி முன்னால்வர மகமேரு பின்னால்வர
சுகமேனி இவ்வுலகில் சோபிதர் நிரைந்துவர (செ)
அரைக்கை சட்டையிட்டு அதற்குமேலே சாட்டுப்போட்டு
ஆய்க்கிட்டு செய்பவர்கள் அருமையாக வருவதைப்பார் (செ)
கரகம்வந்து சேர்ந்ததையா களரு நஞ்சன் தமிழும் பொய்யா
காளியுட மகிமையையா கார்த்தருள வேணுமையா (செப்பு)

2-APR 1927 MADRAS

... என்ற வா... (டு) 3

ஜெகந்தனி... மகிழும் ...ட்டிநகர் தாயே ...பாயே
கண்டேன் முகவிலாசம் ...பூரத்தின்பிரகாசம்
கல்லைப் பெண்ணாக்கி வைத்த வல்லவன்மால்தங்கை
வாக்கருள் வாய்மங்கை
தங்கநிற மங்கைமார்கள் பொங்கலிடுசோதி புவியெங்கும்பிரக்யாதி
சேலை துவைத்துக் கட்டி செந்தூர திலகந்தீட்டி
சேயிளைமார் கோயிலுக்குசெல்லுகின்றசீரு சொல்லவெகுஜோரு
நத்திவந்தவுத்தவர்க்கு முத்தி தந்தகாளி சித்தம்வைமாகாளி
சத்தியந்தவறுநேசன் தாரணியைஆண்ட ராசன் சரித்திரப்
பொருத்தத்தை திருத்தமாகக் கேட்டேன் தரித்திரத்தை ஓட்டு
செங்குந்தமார் சங்கமாய் சிறந்திருக்கும் ஊரு செட்டிநகர் பேரு
நான தேசம் திரியும் பாலன் வுன்தெரிசனை தெரியாசீலன்
பூசெண்டுபோல் சேர்த்தெடுத்த பாட்டு சேயன் நஞ்சன் நோட்டு
(செகந்தனி)

(தாசருச என்ற மெட்டு) 4

சிங்கமீது தங்கியேரும் பங்கயன் தேவி என்
சிந்தையிலுந்தனை சொந்தம்போல் நம்பினே சந்ததம் கூவி (சி)
மனதினில் உனதிருபதமலர் சதமெனும் வரிந்தினேன்
மகராசி மருமலறணிகிட மகிழெங்கும் பெருகிட மகிமைப்பிரபாசி
இந்தமாட்சிமை சேர்செட்டிமாநகர் தன்னிலேகாட்சியை தாராசி
சீமனமும் குணமும தனமும் துலங்கிட வந்திடு மகருசி
மைந்தன் நஞ்சன் வாக்குக்கிரங்கி வாந்தாவேயோசி
வாந்தாவே யோசி (சி)

(திரு மீனலோசனிதாயே என்ற மெட்டு) 5

செட்டிநகர் வளர்தாயே சேயனுக்கருள் தருவாயே
சிந்தையிலுந்தனை சந்ததம் வந்தெனே
செப்ப அருள்தருவாயே செஞ்சேவர்கொடியோன் தாயே
பங்கயன் மருவும் தங்கம் பாரெங்குமுன் பிரசங்கம்
பந்தியாய் மங்குதிரை முந்தியன் கண்ணெதிரே
பார்க்கபார்க்க யெனதங்க பரவசமாகுதே பெண்சிங்கம்
பாவலர்களுடனாட்டம் பத்து நாள்வரையிலுங்கூத்தாட்டம்
பருவமடைந்த மங்கை வருவறனேக மங்கே
பாவையர்களுட கூட்டம் பண்டாரங்களுக்குக் கொண்டாட்டம்
பஞ்சை நஞ்சனுட பாட்டு நீ நெஞ்சிரக்கமுடன் கேட்டு
நித்தமும் பக்தியாய்நத்தினேன்உத்தமி விஞ்சைவளியை நீகாட்டு
உனை வேண்டினேன் வினையோட்டு (செட்டிநகர்வளர்தாயே)

(நாகூர் மீறு என்ற மெட்டு)

செட்டிநகர் வளரும் பட்டீஸ்வரி பதத்தைதொட்டே பதம்பாடும்
மாகாளி இஷ்டப்படி நாடுவோம் கூத்தாடுவோம் (இஷ்)

அந்திசந்தியாய் ஜல ... ந்திபந்தி ... ருமட ...
யலங்காரமே விஸ்தாரமே விரு ... செ ... க்குபகாரமே ...
அத்தர் புனுகு சாந்து அம்பர் ஈகர் ... சண்டு அலர்ந்மலர்வாசமே
உல்லாசமே உன் ஆலயத்தில் வீசுமே
தஞ்சமென்றேயுனை கெஞ்சிப் பணிவிடை செய்
பஞ்சை நஞ்சப்பன் பாட்டு நீ கேட்டு விஞ்சை வழியைக்
காட்டு வினையோட்டு விஞ்சை வழியைகாட்டு (செட்டி)

(தாதாபாய் என்ற வர்ணமெட்டு) 7

பல்லவி.

மாயவன் தங்கையே வா (மாயவ)

அனுபல்லவி.

மனதிலுந் தானே மாவன் வந்தாளே (மா)

சரணம்.

தந்தையும் தாயும் நீயே தர்க்காத்தருளுவாயே
தரித்திரத்தினால் வருத்தமுற்றனே பொருத்தமாய்
சீர்திருத்து செந்தேனே (மா)

தொகையறா.

செட்டிமாநகர் தனில் திட்டமாய் குடிகொள்ளும்
தேவி மாகாளித்தாயே இஷ்டமாயுந்தனை நிஷ்டையில்
மறவாமல் ஏங்கிநின்றேன் சேயேன்

பல்லவியெடுப்பு பாட்டு.

தேசமெங்கு அதிகாரியே செங்குந்தர்க்குபகாரியே
சிந்தையிலுந்தன் தெரிசனம் தேடியே சேயன்
நஞ்சச்சாமி செந்தமிழ் பாடியே (மா)

(குமரனையே பாடி கொண்டாடுவோமே என்றமெட்டு) 8

பல்லவி.

மாகாளியே நாடி மகிழ்ந்தாடுவோமே (மா)

அனுபல்லவி.

மகுடாசுரனை வென்ற மகத்துவத்தைப் புகன்றமகுட
மணிந்த தேவி மகாருசியே மாகாளி (மாக)

(தொகையறா)

பங்கப்படாததோர் சிங்க மீதேறியே பங்கயன் பாரியே வா
தங்கங்கள் போன்றவுன் சிங்கப்பல் தோன்றவே
தஞ்சமென்றே காவாய்

பாட்டு.

சேகண்டி யடிசத்தம் செவியடைபடு நித்தம் சேயன்
நஞ்சுச்சாமியின் செந்தமிழுனது சித்தம் (மா)

...ர்றமெட்டு)

பொருமைக்கார தாயே எ... ம திரும் சேயன்
போர்புரிந்திடும் சூரனை வெ... ர்பெருமிட வீரமாய் நின்ருய்
அருமை பெற்ருய் நீயே வெகுதருமமுற்றதாயே
ஆட்டுக்கிடாப் பூசை உனக்கதின்மேலே வெகு ஆசை
ஆள்ப்பரிந்துமே அடுத்து நிற்குது
வெடித்தமதனை யெடுத்துக் கொடுத்து பாட்டுப்பாடும்
பாசை அதைப்பார்க்கவே தமாசே
செட்டிநகரில் வாசி செந்தாமரை முகருபி
செஞ்சடையோன் மனஞ்சடையவே கொஞ்சியே நடனம்
புரிந்தவள் கெஞ்சினேன் மகராசி நான்நஞ்சயன் பரதேசி (பொ)

(பூமிமெச்சிடும் என்றமெட்டு) 10

பாலன் மார்க்கண்டனைப்பாதுகாத்த பான்பாரியேஉபகாரியேவா
விஸ்தாரியே பாரின்மீது படும்பாவி படுந்துயர் மீரியேவுனைக்கோ
செட்டிமாநகரைப் பட்டம்கட்டியாளும் நீலியே ரண [ரியே
சூலியே அனுகூலியே என்சிந்தையிலுந்தன் செழும்பதம்
நம்பினேன் காளியே புத்திசாலியே
மாலை நேரத்திலுன் ஆலயத்தில்ஜனக்கூட்டமே அன்பர்நாட்டமே
யெதேஷ்டமே யிந்த மங்கிடாத திங்கள் வாரத்திலே
வுந்தனுட்டமே பேய்களோட்டமே மானிலத்தில்
உந்தன் மார்க்கத்தை யியம்ப ஆதரிமாயன் சோதரி பிடிவாதரி
இந்த ஞானிலத்தில் நஞ்சுச்சாமி தமிழொருமாதிரி வாதயாபரி

(மயிலவடிவேலனேவெடுதிர் என்றமெட்டு) 11

பல்லவி.

சிங்கமும் வேலும் சேர்ந்தென் முன்னே நீ வர வா
பங்கயன் தேவிப் பதஞ் சொல்லிக் கூவி
பாரின் மீது பாதவிக்கிறேன் படும்பாவி (சி)
சோமநல்வாரம் சாமமாய்நேறம் சோவிக்குதே
உந்தன் வாக்குப் பிரகாரம் (சி)
பேய்களின் ஆட்டம் பெண்களின் கூட்டம்
பேரைச் சொல்லிப் பேசாமல் போகுதே ஓட்டம் (சி)
செப்ப அருள்வாயே செகமெங்கும் தாயே
செட்டிநகரில் வாழுமுன் சேயன் நஞ்சேயன் (சி)

(கழுகாசலம்வாழ் முருகேசனே என்ற வர்ணமெட்டு) 12

காளி கனபுத்திசாலியே எனைக் காத்தருளுவாய் ரணசூலியே
கனவிலுநானே உனைமறவேனே கர்ப்பூரத்தீபப் பிரகாசியே
நீ எப்போதுநாவிர்ப் பிரகாசியே (கான)

...ட்டிநகர் வாசிவள் தேசிமே ... னருள்
... யே (கா)
ஆயிரங்கண்ணே ஆதரியெக ... கைபெற்(ற)யாத
சேமேமிப்போ நம்பினோ ன ... ருவாய் நீயே (கா)

(அப்படியே நீயுமென்றால் தெம்பாங்கு மெட்டு) 13

பேருன திருப்பூரும் பேர்படைக்கும் செட்டிநகர் சோருன
மாகாளியை தோத்திரிக்கும் ஜனங்களுக்கு துன்பத்தை
நீக்கிடுவாள் மிக இன்பமாய் நோக்கிடுவாள்
மெய்வாய்ச்செவிநோய்கள் வெட்டையுடன் குஷ்டரோகம்
அய்யோன்ற வாங்கிபேதி அடங்காத ரணங்களுக்கு
வேப்பிலையா மருந்து விரும்பினோர்க்கு கரும்பு
மைந்தனில்லையென்று சொல்லி வருத்தமுள்ளோ ரிவ்வுலகில்
மனதில் காளி விரதம்மாருத பெண்களுக்கு
மனம்கிழ்ந்து பார்ப்பான் மைந்தன்கலிதீர்ப்பான்
காரள வம்சத்தில் தாருளமாயுதித்த பேரான பெரியசாமிக்
கவுண்டர் பிரியமுடனே பிடித்திடித்திடுமணிச் சத்தம்
செவியடைக்குதே தொனி நித்தம்
களவாங்கிப் போனபொருள் கனமாக காட்டிவைக்க
குணமான தெய்வம் போல குவலயத்திலே கண்டதில்லை
உனை கருதகஞ்சன்பாட்டு கருத்துவைத்து கேட்டு

(கெள்ளமிசிங்காரதோ என்றமெட்டு) 14

மாகாளியேயுந்தன் மீது மனது வைத்துக் காருய்
மனதிலுந்தன் பதமலரை வரிந்தினேனே காருய்
மாட்சிமையாய் வாருய் உன் காட்சியை நீ தாருய்
மானிலத்தில் மார்க்கமெல்லா மகிழ்வுடனே கூருய்
பிள்ளையில்லை யென்று சொல்லி பேணதமுறை கேட்டு
வெகு பிரியமுடன் இருப்பதுந்தன் அருளை விளையாட்டு
பேய்களை ஓட்டு பிழைக்க வகை காட்டு
பேருலகிலுன்னுடைய பேரை நிலைநாட்டு
எத்தினை சொல்லியுமுந்தன் சித்தமிரங்காதா
இதை உற்று நோக்கும்போது உன்னுடன் பிறப்பின் சூதா
உனை யற்றவன் மேல் வாதா எனக்குற்றவள் நீ மாதா
தமிழ்வகுத் துரைக்கும் கஞ்சுச்சாமிக் கருள் தாதா

(சுதந்தாமென்னும் என்றமெட்டு) 15

காச்சியைத் தரும் சாக்தின்தந்திரமே செட்டிமாநகரில்
மாட்சிமை பெரு பேச்சு மந்திரமே மருமலராணி திருவுளாணி

வா... யாணி மகிமைதங்கிய முகமேசந்திரமே
மண்மதி லுனை... மகிழ்ந்தினைக்க என்னுள் சுகந்தருமே
அருமை பெற்றிடும் பெரு[மை]மக்காராளர் வுன் கோயிலிலே
உருமை பெற்றிடும் தருமவேளாளர்
வக்கத்துடனே யேக்கமுற்றவர் யோக்கியத்துடன்
சேர்க்கையுற்றவர் உகமுழுது வளனளிக்கும் பேருளர்
வெகு உறுதியுடனே உலகமெங்கும் ஏர் உழுதும் ஏருளர்
அலர்ந்தசில்க்குதளர்ந்த மெத்தையிலே ரங்கசாமிக் கவுண்டர்
அமர்ந்திருப்பது அம்மன் நிஷ்டையிலே மணியடிக்கவே நாவு
துடிக்கவே கடுகடுக்கவே பதம் படிக்கவே அவர் பகர்ந்திடுமொழி
பாசெங்குசெப்ப சிறுபால நஞ்சன்பாடிடுமிந்தப்பாட்டினில்தப்பா

(சுகுணசீவனே என்றமெட்டு) 16

தருமபூரணி தாயே வருமமாயினி (தா)
தனையேன் செய்த வினைபோகவே வுன்னையே நம்பினேன் (தா)
தஞ்சமென்று கெஞ்சுநஞ்சன் வஞ்சைதீருமோ
மாகாளிபாராயோ (தாயே தருமபூரணி)

(கமலாட்சி என்றமெட்டு) 17

மகருஷி மகிமைப் பிரகாசி (மக)
மனதிலுற்றவினை மறக்கக்கற்றுந்துணை (மக)

மைந்தனில்லையென்று மனதினில்வாடி
மங்கையருஞ் சொல்லை மறவாமல் பாடி
மாலைநேரத்திலுன் னாலயந் தேடி
மயிலைப்போன்ற செயலை வாய்த்து
குயிலை சான்றதலையைச் சாய்த்து (மக)

செட்டிமா நகர்தனில் சிறந்திடும் அரசி
செஞ்சடையோனை மருவிடும்ராசி
செம்பொற் பாதத்தை நம்பினேன் யோசி
செஞ்சுருட்டி ருகங்கூடி நெஞ்சிரக்கமாக பாடி (மக)

மாணிக்கக்கிரீட மணிமுடி ஜொலிக்க
மணியடி கின்கிணி கிணீரென்று ஒலிக்க
மைந்தன் நஞ்சனுட மனது கெக்கலிக்க
மாலைபோலுனைத்த பாட்டு லயமிட்டுரைக்கக் கேட்டு (மா)

(காணவேணுமென்ற காவடிச்சிந்து மெட்டு) 18

நாளிலம்புகழும் நஞ்சுச்சாமி தினநானுனைப்பணிந்தேன் சிவகாமி
என்னையுமுனையே துதிக்க நல்வழியே யெந்தனுக்கு காமி

காமன்

வீதிதோறும் தோரணங்கள் கட்டி வெ[illegible]
ரதத்தைப் பூட்டி யிந்தமேதினிலே யாவ[illegible]ாய்
பிழைக்கவகை காட்டி உந்தன் கோஷ்டி
செங்குந்தமார்கள் ஒன்றுகூடி மிகச்சிறப்புடன்
ஆசாரியைத்தேடி சிந்தையிலுன்னுடைய திருநாமத்தை
யுச்சரித்து பாடி வாறார் ஓடி
அல்லரோபாவி யென்ற சத்தம் அனையுதே யுன் மகிமை
நித்தம் ஆண்மை பேசி மேன்மையாக அன்புடனே
குத்தும் கத்தி ரத்தம் அம்மன் சித்தம் (கா)

19 (பார்ப்பதெப்போது கந்தஸாமி என்றமெட்டு)

மார்கழிமாதம் திருநாளாய் உனை மனதில் நினைத்தேன்
வெகுநாளாய்
மாகாளியே யாரும் மனது வைத்து காரும் மனதிலுற்றவினை
மறக்க வினை தீரும் (மா)
செல்வமிருந்த வொருவூராம் செட்டிநகர் என்று பேராம்
கஷ்டப்பட்டுகூலி கலங்குரேன் பாவி அஷ்டசரப் பொருளே
ஆதரித்தே அருளே (மா)
வாலைப்பருவமுள்ள பாலன் வாசனையே தெரியாச்சிலன்
யானைக் கொப்பத்திலொரு பூனை நுழைந்தாப்போல்
ஞானம் தெரியாத நஞ்சன் தானே யுரைத்தகவி (மார்)

முதல் பாகம்
முற்றுப்பெற்றது.

18113

இதன் இரண்டாம் பாகம் கூடிய சீக்கிரம்

வெளிவரும்.

ஸ்ரீ அருணாம்பிகை பிரிண்டிங் பிரஸ், திருப்பூர்.